# DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.19/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **சாந்தகுமாரி** (P.w. 2) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02nd day of February 2026

(2வது எதிரி இறப்பு. 1வது மற்றும் 5வது எதிரி ஆஜர் இல்லை. மேற்படிஎதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் நல்லதரையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அசா1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் எங்கள் மீது புகார் கொடுத்து அதன்மீது நாங்கள் முன் ஜாமின் பெற்று போலிஸ் பாதுகாப்புடன் எங்கள் ஊரில் குடியிருந்து வந்தோம். வீரக்குமார் எங்களை அசிங்கமாக பேசிவந்தார். கடந்த 3வருடத்திற்கு முன்பு இரவு 9.00மணிக்கு மேல் நானும் எனது கணவரும் வீட்டில் இருந்தபோது வீரக்குமார், அசோக், ராஜேந்திரன், அழகுசுந்தரம் ஆகிய நால்வரும் வந்து அசோக்குமார் என்பவர் எங்கள் வீட்டிற்குள் வந்து வெளியில் இருந்த கம்பை வைத்து எனது கணவரின் தலையில் அடித்ததில் ரத்தம் வந்தது. அதனால் எனது கணவரை

வெளியில் நான் அழைத்து வந்தபோது எதிரிகள் அனைவரும் கீழே போட்டு மிதித்துவிட்டார்கள். விலக்க வந்தவர்களை வெட்டுவோம், கொல்லுவோம் என்று மிரட்டினார்கள். வேணி, வனிதா ஆகிய இருவரும் என்னை இழுத்து தலைமுடியை பிடித்து இழுத்து சட்டையை கிழித்து அடித்தார்கள். நானும் எனது கணவரும் அவர்களுக்கு பயந்து கொண்டு ராஜகுமார் என்பவரின் வீட்டிற்கு சென்றோம். அவர்கள் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சேர்ந்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.19/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **சண்முகம்** (P.w. 1) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02nd day of February 2026

(2வது எதிரி இறப்பு. 1வது மற்றும் 5வது எதிரி ஆஜர் இல்லை. மேற்படிஎதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை தொடர்ச்சி :–**

நான் நல்லதரையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது மகன் திருமுருகன் என்பவருக்கு 03.09.2021ம் தேதியன்று திருமணம் முடிப்பதற்காக மதுரை குலமங்கலத்தில் பெண் பார்த்து அருப்புக்கோட்டையில் உள்ள பாரதி திருமண மஹாலில் பேசி முடிவு செய்யப்பட்டது. ராஜேந்திரன் என்பவர் கலைவாணி என்ற பெண்ணை எனது மகனுக்கு திருமண முடிக்க என்னிடம் கூறினார். நான் திருமணம் முடிக்க முடியாது என்று கூறிவிட்டேன். அதன்பேரில் எதிரிகள் அருப்புக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுத்தார்கள். அதனால் நாங்கள் இரண்டு மாதம் வெளியில் தங்கி நீதிமன்ற முன்ஜாமினில்

வெளியில் வந்தோம். அதன்பிறகு ஊரில் குடியிருந்தபோது 4வருடத்திற்கு முன்பு அசோக், ராஜேந்திரன், வேணி, கலைவாணி, அழகுசுந்தரம் ஆகியோர்கள் இரவு 9.00மணிக்கு எனது வீட்டிற்குள் வந்து அசோக் என்பவர் கம்பால் எனது இடது கண் புருவம் மற்றும் தலையில் அடித்தார். நான் வெளியில் வந்தபோது ராஜேந்திரன் உயிர் இருக்காடா இல்லையா வெளியே இழுத்துவாடா என்று கூறினார். எதிரிகள் அனைவரும் என்னை கீழே தள்ளிவிட்டார்கள். எதிர் வீட்டில் இருக்கும் வேல்முருகன் என்பவர் சண்டையை விலக்கிவிட்டார். அதன்பிறகு வேணி, கலைவாணி ஆகிய இருவரும் எனது மனைவி சாந்தகுமாரியை அடித்து சட்டையை கிழித்துவிட்டார்கள். அதன்பிறகு நாங்கள் இருவரும் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சேர்ந்தோம். அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது நரிக்குடி போலிசார் என்னிடம் புகார் வாங்கிச் சென்றார்கள். (**அந்த புகார் மனு அதசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.